ஜனவரி 2012
JANUARY 2012
5 - 9
مجلة الربيع ملحق مجلة البشرى باللغة التاميلية

# வசந்தம்

வாசிக்க மட்டுமல்ல.., வாழ்க்கைக்கும்..

மாத இதழ்
The Spring

**கவித்தூறல்கள்**

அயல்தேசத்து அநாதை

அலைகளின் முதுகுகளில் நீர்க்குமிழிகளின் சவாரி..!






# வாழ்வை தொலைக்கச் செய்யும் தொலைக்காட்சித் தொடர்கள்..!



**மழலை மேதை**

அர்ஃபாவின் அசத்தல்..! மரணத்தின் துரத்தல்..!!



ஏன் இந்தக் கலைவெறி..?
Why This
கொலைவெறி..??




முன்நிகழ்வுகளின் இடைப்பதிவுகள்

இலவச வெளியீடு

جمعية النجاة الخيرية

**சமகால மேதை**



அரபுலகையும் அசத்திய அலிமியான்..!

IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية

VASANTHAM -January 2012 New.indd 1
1/31/12 4:02:45 PM


www.twitter.com/Vasantham2k
www.facebook.com/Vasanthamtamil
சமூக வலைதளங்களில்
ஓர் வசந்த சங்கமம்..!
இன்றே விஜயம் செய்வீர்..!
உங்கள் எண்ணங்களைப் பதிவீர்..!
வசந்தம்
www.vasanthamtamil.com

# வசந்தம்

வாசிக்க மட்டுமல்ல.., வாழ்க்கைக்கும்..! மாத இதழ் The Spring

VASANTHAM
Al-Rabae-Tamil Monthly
JANUARY 2012 ஜனவரி 2012
மலர் 5 இதழ் 8



■ Chief Patron
தலைமைப் புரவலர்
Mohd. Ismail Al-Ansari
முஹம்மத் இஸ்மாயீல் அல்-அன்ஸாரி

■ General Supervisor
பொது மேற்பார்வையாளர்
Khalid-al-Sabea
காலித் அல்-ஸபா

■ Editor
ஆசிரியர்
M.A.Abdul Musavir
மு.அ. அப்துல் முஸவ்விர்

■ Editorial Board
குழுமம்
IPC Tamil Section
இஸ்லாமிய நிலையம் தமிழ்ப் பிரிவு

■ Initial Lay-out
முதன்மை வடிவமைப்பு
Aboo Madeeha
அபூ மதீஹா

■ DESIGN
வண்ண உருவரைபடம்
Nader Belal
நாதிர் பிலால்

مؤسسة زخرف للدعاية والإعلان
Zukhruf Advertising Agency
www.zukhruf.net



■ PUBLISHER
வெளியீடு

IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE



■ CONTACTS
தொடர்புக்கு
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT
DIAL
Editor's Desk
22447526, 22444117
Extn: 208
Cell
97848068
FAX
22400057
Attn: IPC—VASANTHAM
e-mail மின்னஞ்சல்
musawir@alnajat.com.kw
vasanthammonthly@yahoo.com

■ WEBSITE வலைதளங்கள்
www.ipc.org.kw
www.vasanthamtamil.com

■ SOCIAL WEBSITES
சமூக வலைதளங்கள்
www.facebook/vasanthamtamil
facebook twitter
www.twitter/vasantham2k
YouTube Scribd.






பக்கம் 15
பக்கம் 8
பக்கம் 4
பக்கம் 20
பக்கம் 13
பக்கம் 17
பக்கம் 18


அட்டைப்பட வண்ண அமைப்பு: நாதிர் பிலால்,கலை மேற்பார்வை:ரவாத்,
அட்டைப்படத் திட்ட வரைவு:முஸவ்விர்-அட்டைப்பட மேற்பார்வை:அபூஅனஸ்




**சாதனைச் செல்வி**
இனியன்
17 *இளவயதிலேயே கணிணிப் பெண் புலிக் குட்டியாக வலம் வந்த பாகிஸ்தானைச் சேர்ந்த அர்ஃபா கரீம் ருவாண்டா அனைவரையும் மீளாத் துயரில் ஆழ்த்தி அகால மரணம் அடைந்தார். (இன்னா..)*

2 **வாசகர் சுகந்தங்கள்**
வாசக நெஞ்சங்களிடமிருந்து..!

3 **தலையங்கம்**
ஆசிரியரிடமிருந்து..!

10 **துணை முகப்புக் கட்டுரை**
கவிஞர் வைரமுத்து

11 **கருத்தாய்வுப் படிவம்**

12 IPC **வழித்தடங்கள்**
அப்துல்லாஹ்

13 **பண்பாடு**
அபூமதீஹா

15 **கவித்தூறல்கள்**
ஞானகுரு

16 **மழலையர் சோலை**
சவுந்தர்யம்

18 **ஆளுமை**
பேரா.ஹஸனீ

19 **சுற்றத்து செய்திகள்**
அழகிய சிறியவன்

20 **சிறப்புப் பார்வை**
நளன்





4 **முகப்புக் கட்டுரை**
மு.அ.அப்துல் முஸவ்விர்

**வாழ்வைத் தொலைக்கச் செய்யும் தொலைக்காட்சித் தொடர்கள்..!**

*தொலைக்காட்சித் தொடர்களின் உந்துதல்களால் வாழ்வின் அத்தியாவசியங்களை அலைக்கழிக்கச் செய்து கொள்ளும் அவலம்..!*

14 குணநலன்
ஃபாரூக்





بريد الربيع - كلمة العدد - اين تذهبون - -أنشطة اللجنة-استبيان -يتيم
غريب (نشيدة) –الغضب -الضغوط النفسية سر العمل-صفحة الأطفال
-العبقرية الصغيرة - الموسيقى-علميان -أخبار العالم -ماذا كان في 2011

# படிப்பினை தந்தது, வசந்த வரிகள்..!




அழகிய விளக்கம்.
வர வர வசந்தம்
தன் ஆளுமையை
செப்பனிடச் செய்வது
என்பதில் வசந்த
வாசகி எனும்
முறையில் எனக்குப்
பெருமையாக
இருக்கின்றது.
புதிய வடிவில்,
புதுப்பொலிவில்
வசந்தத்தை
வரவேற்கக்
காத்திருக்கின்றேன்.

கருணை
திருச்சி-தமிழகம்
சால்மியா-
குவைத்



அழகிய
வசந்தம் எப்போதும்
போல் எம் சிந்தனை
களை சீர்படுத்தி..,
வளப்படுத்த இறைவனை
இறைஞ்சுகின்றேன்!

வசந்தம், டிஸம்பர் 2011 இதழ்
கண்டேன்!நதிநீர் பிரச்னைக்கு
அருமையான வழிமுறையை இறைவேதம் மற்றும்
அண்ணலார் (ஸல்) அவர்கள் வாழ்விலிருந்து
எடுத்துக் காட்டியது அனைவருக்கும் ஒரு
படிப்பினை செய்தியாக இருந்தது.

உமர் அப்துல்லாஹ் (எ) கணேசன்
ஆலம்பட்டு - தமிழகம்
சுபா அல்-ஸாலேம் - குவைத்

அஸ்மா
தஞ்சை - தமிழகம்
ருமைதியா – குவைத்

உலகின்
மிகப்பெரும்
மகளிர்
பல்கலைக்கழகம்
உருவாக்கிய செய்தி
மிக்க மகிழ்ச்சியைத்
தந்தது.
அனைத்து
நாடுகளும் ஸ
வூதியின் இம்மாதிரியைப்
பின்பற்றினால், மகளிர்
கல்வி மேம்பட அதிகம்
வாய்ப்புக்கள் கிடைக்கும்.
மகளிர் வளம் பெறுவர்!
M.S. முஹம்மத் வைசூல்

ஷ.ஃபியுத்தின்
தூத்துக்குடி - தமிழகம்
மிர்காப் – குவைத்

## மின்னஞ்சலில்..!

அழகிய
ஆக்கங்கள்!
வடிவமைப்பு பிரமாதம்..!
அப்துல் காதிர்
qaadirqaadir@yahoo.com

வசந்தம் கண்டேன்..!
வாழ்த்துக்கள்!
கதிரவன்
kathiravan1000@yahoo.com

## அழகிய காட்சி..!

உலகத்துக்கு ஓர்
அருட்கொடை..!
சமாதானத்தின்
சின்னம்..!உலக
முஸ்லிம்களின்
இல்லம்..!அந்த
சிறப்புமிகு
இறைஇல்லத்தை
தரிசிக்கச் செல்லும்
ஹஜ் புனிதக் கடமையின்
மகத்துவத்தை
உணர்த்திக் காட்டி
எம்மை பரவசப்படுத்திய
வசந்தப் பறவை ஊடக
வானில் தொடர்ந்து
உன்னதமாய் வலம்
வர இறைவனை
வேண்டுகின்றேன்.
வளரட்டும் அதன்
பணிகள்!

முஹம்மத் ரம்ஜத்
நித்தம்புவா - இலங்கை
ஃபிர்தவ்ஸ் - குவைத்

தியாகத்தின்
திருவுருவங்களாய்
தம்மை முன்னிறுத்தி
காசுக்காக
கடமையை விற்கும்
போலி 'தியாகிகள்'
நவம்பர் ஆசிரியர்
தலையங்கத்தை



வாசித்துப் பார்க்கட்டும்.
திருந்தினாலும் சரி..,
திருந்தாவிட்டாலும்
சரி.., அவர்கள்
உண்மை தியாகங்களை
கேலியாவது
செய்யாதிருக்கட்டும்.
மரண தண்டனை குறித்த
வசந்த கண்ணோட்டம்

## ட்விட்டரில்..!

twitter

தொடருவோர்..!

@twitamils
தமிழ் ட்விட்டர் காணும்
முயற்சியில்.
Go green Plant trees
Save earth o+ve

@thedalgalதமிழர்களின்
அறிவு தேடலை பூர்த்தி
செய்யும் ஒரே தளம்..
நன்றி!

## ஃபேஸ்புக்கில்..!

facebook



@mohamed ali
kollapuram
செய்தி அறிந்து
மகிழ்ந்தேன்.
விரைவில் FB-
இல் வசந்தம் வலம்வர
காத்திருக்கின்றேன்.
மேலும் வளர
இறைவனிடத்தில் என்
பிரார்த்தனைகளை
சமர்ப்பிக்கின்றேன்.

சமூக வலைத்தளங்களில் வசந்தம் இதழைத் தொடர..,
twitter.com/Vasantham2k
facebook.com/Vasanthamtamil

உங்கள் எண்ணங்களை வார்த்தைகளாக
வரையுங்கள் ட்விட்டர் மற்றும் ஃபேஸ்புக் -கில்..!
அடுத்த மாத இதழில் அதனைப் பாருங்கள்
அச்சு வடிவில்..!!



VASANTHAM -January 2012 New.indd Sec1:2 1/31/12 4:02:54 PM

2012 என்ன செய்ய வேண்டும்?

# உணர்வுகளுக்கு மதிப்பு..!
# உன்னதங்களுக்கு உயர்வு..!!

காலந்தான் எத்துணை வேகமாக உருண்டோடுகின்றது..! அதன் வேகம் புதிய போட்டிகளையும்..,உந்துதல்களையும்..,கண்டுபிடிப்புக்களையும்.., ஊக்குவித்துத் தருகின்றது. இன்றைய செய்திகள்.., நாளைய வரலாறுகள்..! வரலாறுகள்.., பதிவேடுகள்..! பதிவேடுகள் எம்மைப் பதிக்கச் செய்யும் சுவடுகள்..! அந்த சுவடுகளின் தடங்களாய் வசந்தம் தன்னை புதிய வகையில் வார்த்தெடுக்க துவங்கியிருக்கின்றது ஏகஇறைக்கு நன்றி சமர்ப்பித்து..!

மனிதர்கள்தான் எத்தனை வகை..?அவர்களின் எண்ணங்கள்தான் எத்துணை அழகிய கலை..!

அத்தகைய எண்ணங்கள் நம் வாழ்வியல் வண்ணங்களாய் வெளிப்படுகின்றன..!

எண்ணங்களை அறிந்தவர் இரண்டே பேர்..!ஒருவர் அந்த எண்ணத்துக்குரிய நபர்!

மற்றொருவன் எண்ணங்கள் அனைத்தின் சூத்ரதாரியான ஏகஇறைவன்!அதனால்தான் இதயங்களின் இரகசியங்களை அறிந்தவன் என அவனது இணையற்ற வலிமையை போற்றுகின்றோம்.

எண்ணங்களை இரகசியமாக வைத்துக் கொள்ளலாம் என்று மனிதர்கள் நினைக்கின்றார்கள்.அது எப்போதும் உண்மையல்ல..!

‘‘எண்ணத்தை யாரும் எப்போதும் மறைக்க முடியாது.ஏனெனில் எண்ணம் பழக்கமாகவும் பின் சூழ்நிலையாகவும் வெளிப்படுகின்றது’’ என்கின்றான் தத்துவ ஞானியான ஜேம்ஸ் ஆலன் என்பார்.

எனவே, வலிமையான எண்ணங்கள் இருப்பின்., அந்த எண்ணங்கள் நயவஞ்சகமற்ற பழக்கங்களைத் தரக்கூடியவை எனில்.., அவை தெளிவான எண்ணங்களாக அமையும்.அந்தத் தெளிவு பெற.., எண்ணங்களின் பிறப்பிடமான மனம் உறுதி கொண்டதாய் இருத்தல் அவசியம்.
ஆனால்.., இன்றைய உலகின் நிலை என்ன..?

ஊரை அடித்து உலையில் போட்டு ஊர்ப் பெரியவராய் வலம் வரும் நயவஞ்சகர்கள்.! தன்னை உலையில் அடித்துப் போட்டாலும் ஊருக்காக உழைக்கும் உன்னதவான்கள்.

பிழைக்க வழிகள் பல இருந்தும் நாணயங்களுக்காக நாணயத்தை அடகு வைக்கும் நாசகாரர்கள்..! நாணயத்துக்காக நாணயங்களை இழக்கும் நல்லவர்கள்.

இயலாதவர்களின் இயலாமைகளை தங்கள் பிழைத்தலுக்கு இரையாக்கிக் கொள்ளும் கழுகுகள்!உழைத்தும் பிழைக்கத் தெரியாமல் உலுத்தர்களுக்கு தம் உழைப்பை இரையாக்கி களைத்துப் போகும் எளியவர்கள்..!

மாற்றான் வெற்றியால் மனம் புழுகி பொறாமைத் தீயில் வெந்து பழிவாங்கும் பராரிகள்..!பிறர் வெற்றி கண்டு, தான் புளங்காகிதம் காணும் பெருமைக்குரியவர்கள்..!

முன்னே இளித்து.., பின்னே புதைக்கும் போக்கற்றவர்கள்..!கள்ளங்கபடமின்றி வெள்ளந்தியாய் பழகி எல்லாரிடமும் ஏளனப்படும் இளிச்சவாயர்கள்..!

முரணே வாழ்வாய் முழங்கும் முச்சந்தியாளர்கள்.,! முன்னும் பின்னும் முரணில்லாது பழகி பகையையே சம்பாதிக்கும் அப்பாவிகள்!

ஆம்! அனைத்தின் பின்னணியும் எண்ணங்கள்தான்!

தாக்குவது-தாக்கப்படுவது, துரத்துவது-துரத்தப்படுவது, பிடிப்பது-பிடிபடுவது, அனுபவிப்பது-அனுபவிக்கப்படுவது, அலையச் செய்வது-அலைக்கழிக்கப்படுவது! இவ்வாறு இருவேறு ஆளுமை நிலைகளில் ஒவ்வொருவரும் வலம் வருகின்றோமே தவிர, நாம் சிந்தித்து நம் எண்ணங்களை சரியான பாதையில் நிலைநிறுத்துவதில் அவ்வப்போது தவறிவிடுகின்றோம்.

மேலே, மேதையான ஜேம்ஸ் ஆலன் கூறியதை, நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னரே படிக்காத மேதையாய் இறையருளால் உலகை உய்விக்க வந்த நம்பெருமானார் முஹம்மத் (ஸல்) அவர்கள், ‘‘செயல்கள் அனைத்தும் எண்ணங்களின் அடிப்படையிலேயே நிர்ணயிக்கப்படுகின்றன. ஒவ்வொரு மனிதனும் தான் எண்ணியதன் பயனையே அடைகின்றான்......” என்று பொட்டில் அடித்தாற்போல் கூறியுள்ளார்.அறிவிப்பாளர்: உமர் (ரலி) ஆதாரம்:புகாரி,முஸ்லிம் (புனித நாற்பது நபிமொழி:இமாம் அந்-நவவீ)

எனவே, இனி பிற மனிதனுக்கு நம் உள்ளத்தை பரிசளித்தால்.., தன்னம்பிக்கை உனக்கே பரிசளிக்கும்!கழிந்துபோன நினைவுகள்.., எழுதப்படாத நாட்குறிப்புக்களாய் போகட்டும்!

கையளவே தன்னம்பிக்கை என்றாலும் தளராமல்.., கடலளவு நிராசைகள் கடந்தாலும் கலங்காமல்.., கவிஞர் விஜய் வரிகளில் சொல்லப் போனால்.., வாழ்க்கை கவிதை வாசித்து..,வானம் அளவு யோசித்து.., முயற்சி ஒன்றை மட்டுமே மூச்சு போல சுவாசித்து முன்னேறுவோம்..!

ஆனால், ஒரே நிபந்தனையாய்...., இறையச்சத்தின் ஒளியில்.., அண்ணலார் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை சரிதை நிழலில்..!

இத்தகையதொரு பாதையில் பயணம் தூரம்தான்..!ஆனால் இலட்சியம் உயர்ந்தது.

இந்த சத்தியப்பாதையில் இலட்சியப் பயணம் மேற்கொள்ளும் வசந்தம்.., காலத்தின் வளர்ச்சிக்கேற்ப.., இணையதளம், வலைப்பூ, மின்னஞ்சல், ∴பேஸ்புக்,ட்விட்டர்,யூடியூப் என வசதிகளை வாய்ப்புக்களாக்கி உங்களுடன் உறவாடும்..! புதிய வடிவில், புதுப்பொலிவுடன் உங்களை அடைந்திருக்கும் எம் வசந்த தாரகையை அழகிய உள்ளங்களுடன் கரம் கோர்க்கச் செய்யுங்கள்.நிறைகளை நிலைப்படுத்துங்கள்,குறைகளை மன்னித்து சுட்டிக் காட்டுங்கள்.. தூய எண்ணங்களுடன்..!அதற்கு இறையருள் துணை நிற்கட்டும்!

மு.அ. அப்துல் முஸவ்விர்
ஆசிரியர்
musawir@alnajat.com.kw musavir2010@yahoo.com
http://ipcblogger.net/musawir/தேன் சிந்தனைகள்!



VASANTHAM -January 2012 New.indd Sec1:3 1/31/12 4:03:00 PM

மு.அ.அப்துல் முஸவ்விர்

# வாழ்வை தொலைக்கச் செய்யும் தொலைக்காட்சித் தொடர்கள்..!




**உளடகங்கள் மனிதத் தொடர்பை வலுப்படுத்தும் சங்கிலிகள்!அவற்றில் தொலைக்காட்சி வழித் தொடர்புகள் சாமான்யனையும் சென்றடையும் வலிய சக்கரங்கள்!அதன் தாக்கம் ஒவ்வொரு வீட்டிலும் உருவாக்க வேண்டியது ஆகுமான மாற்றங்கள்..! ஆனால், உருவாக்குவதோ நெளியச் செய்யும் சங்கடங்கள்.., முகம் சுளிக்கச் செய்யும் கன்றாவிகள்..!தொடர்களும் (Serials),உண்மை நிகழ்வுக் காட்சிகளும் (Reality Shows) இன்று வாதத்துக்குட்படுத்தப்பட்டு பதப்படுத்தப்பட வேண்டிய அவசியங்கள்!**

*விஞ்ஞானம் இன்று வீட்டு வாசலில் வாசம் புரிகின்றது.அச்சு,மின்னணு ஆகிய ஊடகத்துறைகளில் தகவல் தொழில்நுட்பத்தின் அபரிமித வளர்ச்சி வியக்க வைத்தாலும், வாழ்வியல் தகைமைகள் சார்ந்த அம்சங்களில் அதன் வீழ்ச்சி கவலைப்பட வைக்கின்றது.அதன் முன்னேற்றம் நலன்களைத் தந்தாலும், நாம் அதனைப் பயன்படுத்தும் முறையில்தான் அது தீர்மானிக்கப்படுகின்றது. இணையதளம் இன்று உள்ளங்கை அளவில் உலகைப் படம் பிடித்துக் காட்டினாலும்கூட, இந்தியா போன்ற மக்கள் நெருக்கம் மிகுந்த வளரும் நாடுகளில் இன்றும் பட்டிதொட்டிகளில் தொலைக்காட்சிகள் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருப்பது உண்மை..!*

*உழைத்துக் களைத்துப்போன மனிதருக்கு கேளிக்கை எனும் பெயரில், ஆபாசம், விரசம், கொலை, கொள்ளை, பழிவாங்கல்,துரோகம்,பிறன் மனை கொள்ளல் என்று ஒட்டுமொத்த ஒழுக்கச் சீர்டுகளையும் அது வாரி வழங்கிக் கொண்டிருக்கின்றது. ஒரு தூர்தர்ஷன் இருந்த காலம் போய்.., பொதிகை இருந்த காலம் போய் இன்று நூற்றுக்கணக்கான சேனல்கள் நாழிகைதோறும் திரைப்படங்கள் இந்தியத் தொலைக்காடசிகளில் முதன் முறையாக எனும் அடைமொழிகளுடன்.., பார்வையாளர்களை எண்ணிலடங்கா தடவைகள் சீர்கேட்டில் தள்ளி வேடிக்கை பார்க்கின்றன.*

*இதனைவிட கவலை தருபவை, தொடர்களும் (Serials),உண்மை நிகழ்வுக் காட்சிகளும் (Reality Shows) உருவாக்கி வைத்திருக்கின்ற ஒருவித பயங்கர போதைதான்.*

*அதிகாலை எழுந்து காலை வணக்கங்கள் முடித்து,துணைவனை அலுவலகத்துக்கு அனுப்பி,பிள்ளைகளை பள்ளிக்கூடங்களுக்குத் தயார்படுத்தி,தானும் வேலைக்குத் தயாராகி, இல்லத்தரசியாய்,பணிக்கு செல்லாதவளாய் இருந்தால் வீட்டை ஒழுங்குபடுத்தி.., இத்யாதி.., பணிகளைச் செய்து காலில் சக்கரம் கட்டிக் கொண்டு பறந்தாள் பெண்..!*

*இன்றும் ஆங்காங்கே*



VASANTHAM -January 2012 New.indd Sec1:4 1/31/12 4:03:05 PM




இது நடக்கின்றது..., ஆனால்.., சிறு வித்தியாசங்களுடன்..!

முன்னர் செய்தது கடமைகளை நிறைவேற்ற..!இப்போதோ.., தொடர் பார்க்கும் 'தலையாய கடமை'-யை நிறைவேற்ற..!

அண்டை வீட்டுக்காரர் பெயர் மறந்துபோனால்.., "சன் டி.வி.-லே ராத்திரி 9 மணிக்கு போடுவாங்களே.., அதான் மருமகள பழி வாங்க.., மகன்கிட்ட போட்டுக் கொடுப்பாளே.., அந்த சீரியல் வர மருமக பேர்தாண்டி அவளுக்கும்.." என்று சொல்லி.., அண்டை வீட்டுக்காரர் பெயரை நினைவுபடுத்திக் கொள்ளும் அவலநிலைக்கு நம் சமூகத்தை தள்ளிவிட்டிருக்கின்றது இந்த தொடர் மோகங்கள்.

*'சித்தி'* எனும் தொடருக்காக அலுவலகத்துக்கு அனுமதி போட்டுவிட்டு விரைந்து வந்து வீட்டில் செட்டிலாகிக் **கண்ணின் மணி** பாடலில் இலயித்து.., தன் கண்ணின் மணியான இரத்தங்கள் சாப்பிட்டார்களா இல்லையா.., என்பதைக்கூட மறந்த ஆண் தொடர் பைத்தியங்களும் உண்டு..! அதன் நிறைவு விழாவுக்காக கோலாகல விழா கொண்டாடியதும் உண்டு.

**தொடர்களில் வரும் கதைகளும் பாத்திரங்களும் சமூகத்தில் நடப்பதைத்தானே காட்டுகின்றோம் என்று சொதப்பல் ஆசுவாசத்துடன் வந்தாலும் அதனால் மறைமுகமாக நடக்கும் விளைவுகள் குறித்து கவலைப்படுவதில்லை...!**

வெங்காயம் வெட்டினாலும் கண்ணீர் மறந்த விழிகள்.., தொடர்களில் தொல்லைப்படுத்தப்படும் பாத்திரங்களுக்காக கண்களில் ஆற்றையே ஓட்டியதுண்டு. தன் மகனோ, மகளோ பள்ளி ஆண்டு விழாவில் மேடையேறி பரிசு வாங்குகின்றாளோ இல்லையோ.., *"ஏர்-டெல் ஜூனியர் சூப்பர் சிங்கர்"* போட்டியில் எப்படி முன்னேறினான் பாரு..! "அசத்தப் போவது யாரு?" என்று அசத்திட்டான் பாரு..!, "மானாடுதோ.., மயிலாடுதோ.. என் மகன் ஆடிக் காட்டினான் பாரு ஒரு ஆட்டம்" என்று ஒழுக்கச் சீர்கேட்டுக்கு இட்டுச் செல்லும் வழிமுறைகளில் தம் செல்வங்களைப் பாத்திரங்களாக்கி புளங்காகிதம் அடையும் பெற்றோரும் உண்டு.

இங்கு குறிப்பாக சொல்ல வேண்டும் என்றால், தொடர்கள் மகளிரிடத்தில் ஏற்படுத்தும் தாக்கம்.., குடும்ப உறவுகளில் பெருங்கவலைக்குரிய பாதிப்புக்களை உருவாக்குகின்றது.அதன் தொடர்ச்சி பின்னர் பால்,வயது பேதமின்றி தொடர்கின்றது.

'......... சீரியல்ல வருதே அந்த வீட்டு டெகோரேஷன் என்னமா இருந்துச்சுல்ல..!அவ கட்டியிருந்த சேல மாதிரி சென்னை சில்க்ஸ்ல கிடைக்குமா?., செல்வி நெக்லஸ் டிஸைன் சூப்பர்.." என்று சொல்லி, அதேபோல் கிடைக்க கணவன்மார்களை நச்சரிக்கும் மனைவியர்.., அல்லது அதனை தாய்வீட்டு சீதனமாய் பெற்றுவர சொல்லி இல்லத்தாளை கொடுமைப்படுத்தும் கணவன்மார்கள்....., "எனக்கு ஷக்திமான் டிரஸ் வேண்டும்" என்று சொல்லி அடம் பிடிக்கும் மழலைகள்..!

இதே தொடர்களில் வரும் கதைகளும் பாத்திரங்களும் "சமூகத்தில் நடப்பதைத்தானே காட்டுகின்றோம்" என்று சொதப்பல் ஆசுவாசத்துடன் வந்தாலும் அதனால் மறைமுகமாக நடக்கும் விளைவுகள் குறித்து கவலைப்படுவதில்லை. "உன் புருஷன்தாண்டி எனக்கு வேணும்" என்று வெறித்தனம்,"அவனை என் கால்ல விழுந்து கதற வைக்கிறேனா இல்லயா பாரு..!, அவ எப்படி வாழ்ந்துடறான்னு பார்க்கிறேன்" என்று சொடக்கு போட்டுப் பேசும் கதாபாத்திரங்கள் வெறும் அந்த பாத்திரமாகப் பார்க்கப்படுவதில்லை.மாறாக.., அந்த ஆளுமைகளும் ஒவ்வொரு


VASANTHAM -January 2012 New.indd Sec1:5 1/31/12 4:03:06 PM

மு.அ.அப்துல் முஸவ்விர்




உண்மை வாழ்வியல் உறவுப் பாத்திரங்களிடையே புகுந்து எழுகின்றன.

அதில், ஒரு சிறிய உதாரணமாக முன்பு "குமுதம்" இதழில் வாசகி விஜயலட்சுமி என்பவர் சுட்டிக் காட்டியிருந்த சம்பவத்தைக் கூற முடியும்.சன் டி.வியில் ஒளிபரப்பு செய்யப்பட்ட "இந்திரா" எனும் தொடரில் வரும் ஒரு கொலைக் காட்சியை நாங்கள் குடும்பத்துடன் பார்த்தோம். அப்போது எனது 5 வயது மகளும், ஒன்றரை வயது மகனும் உடன் இருந்தனர். மறுநாள் சமையலறைக்கு நான் சென்ற போது எனது ஒன்றரை வயது மகன் காய்கறி நறுக்கும் கத்தியை கையில் எடுத்துக் கொண்டு ஊ.. ஆ.. என்று டி.வியில் வந்ததைப் போன்று தன் அக்காவை மிரட்டிக் கொண்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றேன். தொலைக்காட்சியின் விளைவு! கடவுளே!.." என்று தொலைக்காட்சியின் விபரீதத்தைக் கண்டு பதறுகின்றார்.(நன்றி : குமுதம்)

**தமிழ்க் கலாச்சாரத்தையே குழி தோண்டிப் புதைக்கும் விதத்தில் பல ரியாலிட்டி ஷோக்கள் தனியார் சானல்களில் வலம் வருகின்றன..!**

இது குழந்தையின் சுட்டிகையை சுட்டினாலும், எந்த அளவுக்கு அந்த காட்சி அந்த பிஞ்சு உள்ளத்தில் நஞ்சு விதைத்திருக்கின்றது என்பதைப் பாருங்கள்.

அதேபோல் முன்பு பிரபல்யமாக அறியப்பட்ட சக்திமான் எனும் குழந்தைகள் தொடரை தொடச்சியாகக் கண்டுகளித்து வந்த ஒரு சிறுவன், தன்னை சக்திமான் வந்து காப்பாற்றுவார் எனும் நம்பிக்கையில்.., மாடியிலிருந்து கீழே குதித்த அவலமும் நடந்தது.



தொடர்கள் இத்தகைய சோகங்களை அரங்கேற்றுகின்றன என்றால், உண்மை நிகழ்வுக் காட்சிகளும் (Reality Shows) தாங்களும் சளைத்தவர்கள் அல்ல என்று நிரூபித்து வருகின்றன.

'பிக் பாஸ்" எனும் தொடர் உருவருடைய அன்றாட அந்தரங்க நடவடிக்கைகளை வெளிச்சம் போட்டுக் காட்டி அசிங்கப்படுத்த ஆரம்பித்தது. எடுத்ததெற்றெல்லாம் தனிமனித சுதந்தரத்துக்கு சாமரம் வீசும் அமைப்புக்கள்கூட இத்தகைய தொடர்கள் எந்த தனிமனித உரிமை குறித்துப் பேசுகின்றன என்பதை விளக்க முடியவில்லை.

முன்பு பிக் பாஸ் எனும் தொடரில் இந்தி நடிகை ஷில்பா ஷெட்டி தன்னுடன் அத்தொடரில் பங்கேற்ற(வரும் பின்னர் புற்றுநோயால் மரணம் அடைந்தவருமான) ஆங்கில வெள்ளை நடிகை ஜேட் ஜூடி தன்னிடம் இன-நிறவெறி பாகுபாட்டுடன் நடந்துகொண்டதாக குற்றஞ்சாட்டி பரபரப்பு ஏற்படுத்தினார்.

அனைத்துக்கும் மேலாக “ராக்கி கா இன்சாஃப்” எனும் ஒரு தொடர் தனியார் சேனல் ஒன்றில் ஒளிபரப்பப்பட்டது.அதில் பிற மனிதர்களின் சொந்த வாழ்க்கைப் பிரச்னைகளுக்கு ராக்கி சாவந்த் எனும் இந்தி கவர்ச்சி நடிகை தீர்ப்பு வழங்குவதாகக் காட்டப்பட்டது.(இதே நடிகை இன்னொரு தனியார் சேனலில் சுயம்வர நிகழ்ச்சியை நடத்தி திருமண உறவுத் தேர்ந்தெடுத்தலை காசாக்கும் முறையை அறிமுகப்படுத்தினார்)

ஆனால், சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியில் அந்த நடிகை பயன்படுத்திய சொற்பிரயோகங்களும், தொடரின் மதிப்பும் சமூகத்துக்கு ஏற்புடைய ஒன்றாக அமையவில்லை.சட்டம்,நீதி,அரசு இயந்திரம்,பிரதிவாதிகள் என்று அனைத்துத் தரப்பினரையும் அவமதிப்பதாக அமைந்திருக்கின்றது என பலத்த எதிர்ப்பு கிளம்பியது.இதனை எதிர்த்து பின்னர் வழக்குகூட போடப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்று, தனது மனைவி வினிதா உடனான திருமண வாழ்வின் பிரச்னைக்கு ராக்கியிடமிருந்து நியாயம் -இன்சாஃப் பெற விழைந்தார் மத்தியப் பிரதேசம், ஜான்சியைச் சேர்ந்த 24 வயது லக்ஷ்மண் பிரசாத் அஹிர்வார்!(அடுத்த பக்கத்தில் உள்ள படத்தில் வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ளவர்) ஆனால், நிகழ்ச்சியின்போது ராக்கி அவரை நாமர்த்-ஆண்மையற்ற பேடி என்று கூறியதால் மனம் வெதும்பி,உண்ணாமல்,அருந்தாமல் தன் வாழ்வை முடித்துக் கொண்டதாக பெரும் சர்ச்சை



VASANTHAM -January 2012 New.indd Sec1:6 1/31/12 4:03:06 PM

கிளம்பியது.

அதேபோன்று, தமிழ்க் கலாச்சாரத்தையே குழி தோண்டிப் புதைக்கும் விதத்தில் பல ரியாலிட்டி ஷோக்கள் தனியார் சானல்களில் வலம் வருகின்றன.மானாட..., மயிலாட.. என்று கவித்துவமான பெயரை வைத்துக் கொண்டு.., அசிங்க அசைவுகளுடன் ஆட்டம்..!அசத்தப் போகின்றோம்.., கலக்கப் போகின்றோம் எனும் பெயர்களில்.., சமூகத்தை சாக்கடையாக்கும் வகையிலான நகைச்சுவைகள்.அதில் பங்கேற்கும் நடுவர்கள்கூட நிகழ்ச்சியாளர்களுடன் இணைந்து தங்கள் ஆளுமைகளை தரங்குறைத்துக் கொள்ளும் கொடுமை..!

ஒரு சிறிய காட்சி..! பரீட்சையில் தோல்வியுற்றதால் தான் படும் அவஸ்தையை பழைய தமிழ்ப்பாடல் மெட்டில் அமைத்து ஒரு சிறுவன்
நடித்த ரியாலிட்டி
ஷோவைக் கண்டிருந்தால் நீங்கள் அதிர்ந்து போயிருப்பீர்கள். அந்தப் பாடல் மது அருந்திவிட்டு ஒரு கதாநாயகன் நடித்த காட்சியமைப்பில் இருந்தததால் அந்த சிறுவனும் அப்படியே குடித்துவிட்டு ஆடுவதுபோல் செய்தான். இறுதியில் ரோதல்வியால் துவண்டு விஷ மருந்துவதுபோல் காட்சி.
அந்த சிறுவனுக்கு என்ன வயது தெரியுமா..? வெறும் நான்குதான்.!

சிந்தியுங்கள்..!
அந்த பிஞ்சு உள்ளம் எத்தகைய ஆளுமையை வளர்த்துக்கொள்ளும் என்று..!

இப்படி சொல்லிக் கொண்டெ போக முடியும்..!

தினமணி" நாளிதழின் வாசகர் கடிதம் இவ்வாறு பேசுகின்றது:"வளர் இளம் பருவத்திடம் ஓடிப்போகும் கலாச்சாரம் பரவலாகக் காணப்படுவதற்கு சின்னத் திரைத் தொடர்களும், வண்ணத்திரைகளும் தான் காரணம். பெரும்பாலும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்களில்தான் இந்த ஓடிப்போகும் நிகழ்வு நடைபெறுகிறது. வறுமையும், பண்பாட்டுச் சீரழிவும் காணாமல் போனால்தான் இந்த சமுதாயத்தில் ஓடிப்போகும் கலாச்சாரம் இல்லாத நிலை உருவாகும். "சோம நடராசன் (கரூர்) "
நன்றி : தினமணி (282004-05-)

அந்தப் பாடல் மது அருந்திவிட்டு ஒரு கதாநாயகன் நடித்த காட்சியமைப்பில் இருந்தததால் அந்த சிறுவனும் அப்படியே குடித்துவிட்டு ஆடுவதுபோல் செய்தான்.

சினிமாவில்.., தொடர்களில் வருவதைப் போன்று உயர்மட்ட வாழ்க்கை வேண்டும் என்ற போலி ஆசையில் தனது வாழ்வையே சூனியமாக்கிக் கொள்ளும் அவல நிலை உருவாக சின்னத் திரைத் தொடர்களும், வெள்ளித்திரைகளும் பெருமளவு பாதை வகுக்கின்றன.

குழந்தைப் பருவம் பாழ்பட இந்த தொலைக்காட்சி தொடர்களின் தாக்கம் எந்த அளவிற்கு வேரூன்றியிருக்கிறது என்பதை ஒரு சின்ன புள்ளி விவரத்தின் மூலம் அறிய முடியும்.

ஒரு புள்ளிவிபரத்தின் படி ஒரு அமெரிக்கக் குடிமகன் ஒவ்வொரு நாளும் சராசரியாக மூன்றே முக்கால் மணி நேரம் தொலைக்காட்சியைப் பார்க்கிறான்.65 ஆண்டு கால உலக வாழ்க்கையில் ஒரு மனிதன் ஒன்பது ஆண்டுகாலம் தன் வாழ்க்கையை தொலைக்காட்சியைக் கண்டுகளிப்பதில் வீணடிக்கிறான்.
இப்படி அவன் பார்த்த தொலைக்காட்சியில் 20 இலட்சம் விளம்பரங்கள் வருகின்றன. இதனால்தான் தம் தேவைகளைவிட அதிகமாக பொருட்களை தாங்கள் வாங்குவதாக 82% அமெரிக்கர்கள்












VASANTHAM -January 2012 New.indd Sec1:7 1/31/12 4:03:06 PM



கூறுகின்றனர்.

ஒவ்வொரு வாரமும் சராசரியாக 1680 நிமிடங்கள் ஒரு குழந்தை தொலைக்காட்சியை பார்ப்பதில் செலவழிக்கிறது. ஆனால் தன் பெற்றோருடன் பயனுள்ள விஷயங்களை குறித்துப் பேச 38.5 நிமிடங்கள் மட்டுமே ஒரு குழந்தை பயன்படுத்துகிறது.

ஒரு வயதுக் குழந்தை தொலைக்காட்சி முன் தினமும் 6 மணி நேரத்தைக் கழிக்கிறது. ஆண்டொன்றுக்கு 900 மணி நேரத்தை சிறுவர்கள் பள்ளிக் கூடங்களில் கழிக்கின்றனர். ஆனால் அவர்கள் தொலைக்காட்சியைப் பார்க்க எடுத்துக் கொள்ளும் நேரம் 1023 மணி நேரங்கள்.

உயர்நிலைப் பள்ளியை முடிக்கும் மாணவன் ஒருவன் 19,000 மணி நேரம் தொலைக்காட்சியை பார்த்த அனுபவம் உடையவனாய் அப்பருவத்தை அடைகிறான்.

18 வயதை அடைவதற்குள் ஒரு சிறுவன் தொலைக்காட்சி வழியாக இரண்டு இலட்சம் வன்முறைக் காட்சிகள் பார்த்து வருவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. 11 வயதை அடைவதற்குள் 8,000 கொலைகளையும் இன்னும் 10,000 வன்முறைகளையும் ஒரு சராசரி குழந்தை பார்த்து விடுவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் 36,000 பள்ளிகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் வன்முறையை தொலைக்காட்சியில் பார்ப்பதற்கும், செயலில் இறங்குவதற்கும் நெருங்கிய தொடர்பு இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் தொலைக்காட்சியை சிறுவர்கள் எவ்வித உணர்வும் இல்லாமல் பார்ப்பதில்லை. மாறாக, தாங்கள் பார்க்கும் ஒவ்வொரு காட்சியையும் தமது ஆழ் மனதில் உள்வாங்கிக் கொள்கிறார்கள். இதனடிப்படையில் அவர்கள் செயல்களில் இறங்குவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நிஜத்திற்கும், நிழலுக்கும் இடையே எவ்வித வேறுபாட்டையும் இவர்களால் காணமுடிவதில்லை.இதனால், தொலைக்காட்சி ஏற்படுத்திய பாதிப்புகளால் வாழ்க்கை பயங்கரமானதாகவும் இருள் சூழ்ந்ததாகவும், கவலைக்குரியதாகவும் ஆகிவிடுவதாக பெருவாரியான குழந்தைகள் கருதுவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தொலைக்காட்சிப் பெட்டியின் முன் தவம் கிடக்கும் 5 வயதில் இருந்து 8 வயதுக் குழந்தைகளுக்கு இதய நோய்களில் ஏதாவது ஒன்று தாக்கப்படும் அபாயம் இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. 1960 களில் இருந்த தொகையைவிட 1990 களில் மிதமிஞ்சிய உடல் பருமன் கொண்ட குழந்தைகளின் எண்ணிக்கை இரு மடங்கு அதிகரிப்பதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.இதற்கு காரணம் உடல் ரீதியாக எவ்வித நடவடிக்கைகளில் ஈடுபடாமலும் தொலைக்காட்சிப் பெட்டிகளின் முன் முடங்கிக் கிடப்பதும் தான் காரணம் என மருத்துவர்கள் கூறுகிறார்கள்.

பெரியவர்களின் அந்தரங்க நடவடிக்கைகள் எல்லாம் சிறுவர்களுக்கு அப்பட்டமாக வெளிச்சம் போட்டுக் காட்டும் சமூக துரோகிகளாகவும் தொலைக்காட்சியும் அதன் நிகழ்ச்சிகளும் விளங்குகின்றன.

> பெரியவர்களின் அந்தரங்க நடவடிக்கைகள் எல்லாம் சிறுவர்களுக்கு அப்பட்டமாக வெளிச்சம் போட்டுக் காட்டும் சமூக துரோகியாகவும் தொலைக்காட்சியும் அதன் நிகழ்ச்சிகளும் விளங்குகின்றன.

பெரியவர்கள் சண்டை போட்டுக் கொள்வது,மனமுடைந்து கண்ணீர் விடுதல்,கொலை,பாலியல் உறவுகள் கொள்வது மற்றும் வன்முறைகள் போன்றவற்றை










குழந்தைகள் தொலைக்காட்சிகளில் காண்கிறார்கள். பெரியவர்களின் இத்தகு பொறுப்பற்ற மானக்கேடான வாழ்க்கைகளை தொலைக்காட்சியில் மீண்டும் மீண்டும் பார்க்கும் குழந்தைகள் அவர்களை தவறுகளுக்கு முன்னுதாரணமாக்குகிறார்கள்.

பெரியவர்களின் இத்தகைய அந்தரங்கங்கள் அம்பலம் ஏறுவதால் குழந்தைகளின் கள்ளம் கபடமற்ற தன்மை கேள்விக்குறிதாகி விடுகின்றது.பசுமரத்து ஆணி போல தொலைக்காட்சியில் சித்தரிக்கப்படும் போலிப்பகட்டு நிகழ்வுகள் வாழ்வியல் நடப்புக்களாக பிஞ்சு நெஞ்சங்களில் பதிவாகின்றன.

இதனால் இவர்களின் எதிர்காலம் பாழ்படும் அளவிற்கு நஞ்சு விதைகள் விதைக்கப்படுகின்றன.

இந்த அபாயத்தை உணராமல் செயற்கைக் கோள் அலைவரிசைகளின் எண்ணிக்கை பல்கிப் பெருகி மனித வாழ்வின் நிலையை பெரும் அபாயத்திற்கு அழைத்துச் செல்கிறது.ஓய்வையும் ஆரோக்கியத்ததையும் கெடுக்கின்றது.




ஓய்வையும் ஆரோக்கியத்தையும் பாழ்படுத்தும் தொலைக்காட்சி அம்சங்களிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்வதில் நாம் அலட்சியமாக இருப்பதை அண்ணலார் (ஸல்) அவர்கள் அன்றே உணர்த்தியிருக்கின்றார்கள்.

**இரண்டு அருட்கொடைகள் விஷயத்தில் மக்கள் நஷ்டத்திலேயே இருக்கிறார்கள் அவை ஓய்வு நேரமும், ஆரோக்கியமுமாகும்.**
**அறிவிப்பாளர் : இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள்**

அபாயத்தை உணராமல் செயற்கைக் கோள் அலைவரிசைகளின் எண்ணிக்கை பல்கிப் பெருகி மனித வாழ்வின் நிலையை பெரும் அபாயத்திற்கு அழைத்துச் செல்கிறது.ஓய்வையும் ஆரோக்கியத்ததையும் கெடுக்கின்றது.

(ஆதாரம் : புகாரி)

ஆனால், இந்த ஊடகத்தை சரியான வழியில் செலுத்தினால் நிச்சயம் சமூகத்தை சரியாகக் கொண்டு செல்ல முடியும்.

திரைப்படத் துறையில் எவ்வாறு ஈரானிய திரைப்படங்கள் உண்மை யதார்த்தங்களை.., திரைப்படத் துறைக்கே உரித்தான போலிப் பகட்டுக்கள்,சமூகத் தீமைகளின்றிய படங்களைத் தரமுடியும் என்று நிரூபிக்கின்றனவோ.., அதேபோன்று தொடர்களும், ரியாலிட்டி ஷோக்களும் சமூகத்தில் ஒழுக்க அம்சங்களை முன்னெடுத்து செல்லக்கூடிய வகையில் தரமுடியும்.அதற்காக அவர்கள் தமது TRP ரேட்டிங்குகள் எனப்படும் தொலைக் காட்சி பார்வையாளர் தரவரிசைக் கிரமத்ததை இழந்தாலும் சரியே..!

இந்த ஆரம்ப முயற்சிக்கு எவரேனும் ஆரம்பசுழி இட இறையருள் துணை நிற்கட்டும்!



VASANTHAM -January 2012 New.indd Sec1:9 1/31/12 4:03:07 PM

# அலைகளின் முதுகுகளில் நீர்க் குமிழிகளின் சவாரி..!

**தொலைக்காட்சி மற்றும் சினிமா போன்ற இந்த ஊடகங்களின் கோரப்பிடியில் சிக்கிச் சீர்கெட்டுக் கிடக்கும் இளைய சமுதாயத்தைப் பார்த்து அதே சினிமாத்துறையில் அங்கமாக வகிக்கும் வைரமுத்து என்ற கவிஞர் தன் உள்ளக் குமுறலை பின்வருமாறு கூறுகிறார்.**

"எங்கே போகின்றோம்?" என்று தெரியாமல் அலைகளின் முதுகுகளில் சவாரி செய்யும் நீர்க் குமிழிகளைப் போன்று நீயும் குறிக்கோளின்றி சென்று கொண்டிருக்கிறாயே!

உன் முதுகுக்குப் பின்னால் பள்ளம், முதுகுக்கு முன்னால் இருட்டு! கண்பார்வை உனக்கு இருக்கின்றதா? இல்லையா? என்று சோதித்துப் பார்க்கக் கூட அந்த இருட்டு உனக்கு சந்தர்ப்பம் அளிக்கவில்லை!

ஆட்டுவித்தால் ஆடும் பொம்மைகளாய் சாவி கொடுத்தால் சுற்றும் சக்கரங்களாய் நம் இளைஞர்கள் இருந்தால் அடுத்த தலைமுறை நகராத கூடமாய் நசிந்து போகும்.

இளைஞனே! உன்னைப் பற்றி எனக்கு வரும் தகவல்கள் என் குதூகலத்தையே குழிதோண்டிப் புதைக்கின்றன! எங்கே போகின்றோம் இளைஞர்களே?



ஒரு கல்லூரி விடுதிக்கு விலைமாதர் வருவதாக என் செவிக்கு எட்டுகிறது! பாவிகளே! இது கல்விச் சாலையா? அல்லது கலவிச் சாலையா?

வேறொரு விடுதியில் ஒரு மாணவியின் கைப் பையில் போதை மாத்திரையும், கருத்தடை மாத்திரையும் சம விகிதத்தில் சாட்சிகள் எட்டுகின்றன!

> ஆட்டுவித்தால் ஆடும் பொம்மைகளாய் சாவி
> கொடுத்தால் சுற்றும் சக்கரங்களாய்
> நம் இளைஞர்கள் இருந்தால் அடுத்த தலைமுறை
> நகராத கூடமாய் நசிந்து போகும்.

அடிப் பாவிப் பெண்ணே! நீ மனத்தை நிரப்ப வந்தாயா? அல்லது மடியை நிரப்ப வந்தாயா?

- இந்த இளைய தலைமுறை தடுமாறிக் கொண்டிருப்பதற்கு யார் பொறுப்பு?
- இவர்கள் இப்படி கனாக் காரர்களாய் அலைவதற்கு யார் காரணம்?
- இவர்களுக்கு இந்த ஆடை கட்டாத ஆசைகளை ஆட்டிவிட்டது எது?
- வாழ்க்கையின் யதார்த்தம் பார்த்து அஞ்சும் மனோபாவம் எப்படி வந்தது?
- இவர்கள் இப்படி உள்ளீடற்றவர்களாய் உருமாற்றியது எது?

(நன்றி : "வைரமுத்து"வின் சிற்பியே உன்னைச் செதுக்குகின்றேன்)



VASANTHAM -January 2012 New.indd Sec1:10 1/31/12 4:03:08 PM

# கருத்தாய்வு படிவம்

*வசந்தம் தங்களுக்கு எவ்விடத்திலிருந்து கிடைக்கப் பெறுகின்றது...?*

- IPC தலைமையகம்-கிளைகளில்..!
- வசிப்பிடங்களில்..!
- பொதுவான மற்றும் இன்ன பிற இடங்களில்..!



*வசந்தம் கிடைக்கப் பெறுவது எளிதாக இருக்கின்றதா&?*



- ஆம்..!
- சற்றே சிரமத்துக்குப் பின்..!
- எளிதாக இல்லை..!

*வசந்தத்தில் வெளிவரும் ஆக்கங்கள் பற்றிய தங்கள் கருத்து..?*

- மிக்க நன்று..!
- பரவாயில்லை..!
- மோசம்..!



*தமிழ் கூறும் நல்லுலகத்துக்கு வசந்த படைப்புக்கள் தாக்கம் ஏற்படுத்தக்கூடியவையா..?*



- ஆம்..!
- சுமாராக..!
- இல்லை..!

*வசந்தத்தின் ஆக்கங்களில் தங்களுக்கு மிகவும் பிடித்தது எது..?*

- இஸ்லாமிய ஆக்கங்கள்..!
- சிறப்புக் கட்டுரைகள்..!
- பொதுவான மற்றும் இன்னபிற ஆக்கங்கள்..!



*வசந்தத்தின் மொழித்தரம் எப்படி..?*



- உயர்தரமானது..!
- சுமாரானது..!
- கடினமானது..!

*வசந்த ஆக்கங்களின் வரிசைக் கிரமங்கள் எப்படி..?*

- மிக்க நன்று..!
- பரவாயில்லை..!
- மோசம்..!



*வசந்த பக்கங்கள்,தரம் போதுமானதாக.., சரியானதாக இருக்கின்றதா..?*



- சரியானது..!
- சரியானது..!சிறிது மாற்றம் தேவை..!
- முற்றிலும் மாற்றம் தேவை..!

*வசந்தம் தன் கட்டுரை மற்றும் செய்தி ஆக்கங்களுக்கு தக்கவாறுபடங்களைத் தருகின்றதா..?*

- ஆம்..!
- பரவாயில்லை..!
- இல்லை..!



*வசந்தத்தின் முகப்பு அட்டை மற்றும் வடிவமைப்பு குறித்த தங்கள் கருத்து..!*



- மிக்க நன்று..!
- பரவாயில்லை..!
- மோசம்..!

வசந்தம குறித்து தங்களின் ஒட்டுமொத்த கருத்து.. சில வரிகளில்..



## சுயவிவரங்கள் Personal Data

| | | | |
|---|---|---|---|
| பெயர் Name | விரும்பினால் தரலாம் | | |
| வயது Age | | பாலினம் Gender | ஆண்/பெண் Male/Female |
| தேசிய இனம் (நாடு) Nationality | | குவைத்தில் வசிக்கும் இடம் Location @ Kuwait | |
| செல்லிடைப்பேசி Cell No. | விரும்பினால் தரலாம் | மின்னஞ்சல் email ID | |

பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை தபால் மூலமாகவோ (முகவரி முதல் பக்கத்தில்) IPC தலைமையகத்திலோ அல்லது கிளைகளிலோ அல்லது 22400057 (Attn: VASANTHAM) எனும் Fax-தொலைநகல் மூலமாகவோ அல்லது musavir2010@yahoo.com எனும் email-மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம். அல்லது பின்வரும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடலாம். - DANA Textiles -மினா பஜார், மிர்காப்-SEEMATY, மிர்காப்-Old Tanjai Restaurant,IPC அம்காரா கிளை மற்றும் சுலைபியா கிளைகளில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் சேர்க்கலாம்.



VASANTHAM -January 2012 New.indd Sec1:11 1/31/12 4:03:13 PM

# புனித ரமளான் அறிவுப் போட்டி வெற்றியாளர்கள்..!







இஸ்லாமிய நிலையம் IPC சார்பாக நடத்தப்பட்ட புனித ரமளான் அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா IPC தலைமையகத்தில் நடைபெற்றது.வசந்தம் ஆசிரியர் மு.அ.அப்துல் முஸவ்விர் வழங்க,மிஸ்பாஹ் உர்தூ இதழ் ஆசிரியர் ஸஃபாத் ஆலிம் முன்னிலையுடன், விமரிசையாக நடைபெற்றது. தலைமையக அழைப்புப் பணித்துறைத் தலைவர் அஷ்ஷேக் முஸ்அத் அல்-எனஸி அவர்கள் வெற்றி பெற்றவர்களுக்கு பணமுடிப்புப் பரிசுகள் வழங்கினார்.தமிழ் உள்ளிட்ட எட்டுக்கும் மேற்பட்ட மொழிகளில் இந்த போட்டி நடைபெற்றது.

மகளிருக்கான பரிசுகள் ரவ்தா, IPC மகளிர் தலைமையகத்தில் வழங்கப்பட்டன.

**தமிழ் மொழிப்பிரிவில் வெற்றி பெற்றவர்கள்:**

**ஆண்கள் பிரிவு**

முதல் பரிசுகள்: கே. குணம், சுந்தரம் (எ) ஸுஹைல்

இரண்டாவது பரிசுகள்: இந்திரன், விநோத் குமார் (எ) அப்துர் ரஹ்மான்

மூன்றாவது பரிசுகள்: திருமுருகன், முருகானந்தம் (எ) ஸஊத்

**பெண்கள் பிரிவு**

முதல் பரிசு: பவளக்கொடி (எ) நஜ்லா

இரண்டாவது பரிசு: தவமணி (எ) ஃபாத்திமா

மூன்றாவது பரிசு: ஃபாத்திமா ராஜு

















VASANTHAM -January 2012 New.indd Sec1:12 1/31/12 4:03:17 PM

அபூமதீஹா

# ஏன் இந்த கலைவெறி..?

# Why This கொலைவெறி..?

**பண்பாட்டுக் கொலை வெறியா, தமிழ் மொழிக் கொலை வெறியா..?அல்லது இரண்டும் இணைந்த இரட்டைக் கொலை வெறியா..?**

ரத்தன் டாடாவுடன் விருந்து..! அமிதாப்பச்சனுடன் அழகிய சந்திப்பு..! உலகளாவிய தொடர்புகள்..! என்று இந்த பாட்டு ஒரு தமிழனை எங்கோ கொண்டு சென்றுவிட்டதாக பரணி பாடிக் கொண்டிருக்கின்றார்கள் அனைவரும்..!ஆனால்..., தமிழைக் கொலை செய்துதான் இந்த கொண்டாட்டங்கள் என்று குமுறவும் செய்கின்றது தமிழ் ஆர்வலர்கள் தரப்பு..!

உலகின் தலைசிறந்த பத்திரிகை என வருணிக்கப்படும் டைம் பத்திரிகைகூட அழகான அர்த்தமற்ற சொற்களால் ஆன பாடல் என்று வருணித்தது.

இவ்வாறு பல்வேறு தரப்புக்களில் இருந்தும் வருணிக்கப்பட்ட இந்த பாடல் எத்தகையதொரு தாக்கத்தை உருவாக்கி வைத்திருக்கின்றது என்று பலரும் பெருமைப்பட்டுக் கொள்ள அதன் இன்னொரு பக்கத்தை உணர மறந்து விட்டிருக்கின்றார்கள்.

மொழி ரீதியிலான கொலையாக இதனைப் பார்ப்பவர்கள்கூட அதனை அந்தக் குறிப்பிட்ட துறை சார்ந்த கொலையாகவே நோக்குகின்றார்களே தவிர அதனை கலாச்சாரக் கொலையாகக் காணவில்லை.

அதேபோன்று வெறும் கலாச்சாரக் கொலையாகக் காண்பவர்கள்.., மொழிக் கொலையாக அதனைப் பார்ப்பதில்லை..!

ஆனால், உண்மையில் இரட்டைக் கொலைகளாகத்தான் இவை நடந்தேறியிருக்கின்றன என்று சொல்ல வேண்டும்.

'ஈவ்-டீஸிங்' என்று ஒருபுறம் கூப்பாடு போட்டுவிட்டு மறுபுறம் அதற்கு தாளம் போடும் இதுபோன்ற பாடல்களுக்கு சமூகம் அங்கீகாரம் தருவது தகுமா..?

இணையதள உலகில் மோகம் கொண்டு திரியும் இளைய சமூகத்தை தமது வெற்றிக்கான காரணியாகப் பயன்படுத்தி.., ஒருவித போதையை ஏற்படுத்தியிருக்கின்றார்கள் என்பதுதான் உண்மை..!

ஒற்றை வரியில் சொன்னால் என்ன செய்தியைத் தருகின்றோம் என்று தெரியாமலேயே.., வெறும் 'நான்சென்ஸ்பாணியில் இந்த அம்சம் அரங்கேற்றப்பட்டிருக்கின்றது என்று சொல்ல வேண்டும்.

அந்தப்



பாடலைத் தந்த தனுஷ்கூட.., "அப்ஸல்யூட் நான்சென்ஸ்"" என்று அதனை வருணித்தார்.

நகரம்-கிராமம்,வெள்ளை-கருப்பு,ஆசியம்-ஆஃப்பிரிக்கம், அமெரிக்கம்-ஐரோப்பியம் எனும் வித்தியாசமில்லாமல் ஊடகங்களால் ஒரே வரியில்

> சூழலுக்கு ஏற்ப மொழிப் பிரயோகத்தை மாற்ற இடம் இருக்கலாம்.ஆனால், மாற்றத்துக்கு ஒவ்வாத சில பாரம்பர்ய அம்சங்களையும் அதே பாணியில் மாற்றலாம் என்று எதிர்பார்க்கக் கூடாது.

இணைக்கப்பட்டிருக்கின்ற இன்றைய இளம்தலைமுறைக்கு விளைவுகள் பற்றிக் கவலை இல்லை.இதனால்தான், அப்போதைக்கு தங்களை மெய்மறக்கச் செய்கின்றஎதுவொன்றையும் உடனே ஆட்கொண்டுவிடுகின்றார்கள்.

அதனால்தான், வணிக சமூகமும் இந்த போக்கை கரன்சிகளாக மாற்றுவதற்கு அவர்களின் இந்த போக்கற்ற தன்மையைப் பயன்படுத்திக் கொள்கின்றது.

ஆங்கிலம் கலந்து தமிழைக் கொலை செய்வதை அனைத்துத் தமிழ் ஆர்வலர்களும் எதிர்ப்பதில்லை.வசீகரத் தமிழ் தரும் கவிஞர் தாமரை, "அநாவசியமாக ஆங்கிலத்தைக் கலக்க வேண்டாம்" என்று மட்டுமே சொல்ல வருகின்றார்.

சூழலுக்கு ஏற்ப மொழிப் பிரயோகத்தை மாற்ற இடம் இருக்கலாம்

ஆனால், மாற்றத்துக்கு ஒவ்வாத சில பாரம்பர்ய அம்சங்களையும் அதே பாணியில் மாற்றலாம் என்று எதிர்பார்க்கக் கூடாது.

எதார்த்தத்துக்கு இடம் கொடுக்க வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.ஆனால் அந்த எதார்த்தங்கள் உண்மைத்தனத்தை,மனித பண்பாட்டின் உயரிய தாத்பர்யங்களைக் குழி தோண்டிப் புதைத்துவிடக்கூடாது.

இதற்கு மாற்றமாக பண்பாட்டு,மொழி சார்ந்த ஒரு இரட்டைக் கொலையைத்தான் இந்த கொலை வெறிப்பாட்டு உருவாக்கியிருக்கின்றது.இதனால் தமிழுக்கும் பெருமை இல்லை..,கூடவே மனித இனத்துக்கும்..!



VASANTHAM -January 2012 New.indd Sec1:13 1/31/12 4:03:20 PM



# கொல்லும் கோபம்..!

ஒருவருக்கு அதிகமாக கோபம் வந்தால் அந்த கோபத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்து உடல் நலத்தையும், மறுமை வாழ்வையும் காக்கக் கூடிய அழகிய ஆலோசனையையும் அல்லாஹ்விடமிருந்து சத்தியத்தை ஏந்தி வந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நமக்கு சொல்லித் தந்துள்ளார்கள்.

**அனைத்து விஷயங்களிலும் எளிதில் உணர்ச்சி வசப்படக் கூடியவனாகவே படைக்கப்பட்டுள்ளவன் மனிதன்..! அதனால், எது சரி, எது தவறு என்பதை பிரித்து அறிய இயலாத நிலைக்குத் தன்னை ஆட்படுத்திக் கொள்பவன்..! சூழ்நிலைக்கேற்ப செயல்களின் வீரியங்களுக்கு ஏற்றவாறு தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு உணர்வுகளை அடக்கி ஆள்வதே அவனுக்குரிய வெற்றிக்கலன்..!அதற்கு உதவுவதே திருக்குர்ஆனிய அரண்..!**

குரல் வளையிலிருந்து அதிகமான சப்தம் வெளிப்படுவதையே இஸ்லாம் தடுத்திருக்கிறது அதை அஞ்ஞானப் பழக்கம் என்று இடித்துரைக்கிறதென்றால் கோபத்தின் வாயிலாக கடுமையான வார்த்தைப் பிரயோகங்கள் செய்வதையும் ஒருவருக்கொருவர் காரி உமிழ்ந்து கொள்வதையும் சட்டையைப் பிடித்துக் கொண்டு மல்லுக்கு நிற்பதையும் இஸ்லாம் அனுமதிக்குமா? சிந்தித்துப் பார்க்கக் கடமைப் பட்டுள்ளோம்.

ஒருவருக்கு அதிகமாக கோபம் வந்தால் அந்த கோபத்தைக் கட்டுக்குள் கொண்டு வந்து உடல் நலத்தையும், மறுமை வாழ்வையும் காக்கக் கூடிய அழகிய ஆலோசனையையும் அல்லாஹ்விடமிருந்து சத்தியத்தை ஏந்தி வந்த அண்ணல் நபி (ஸல்) அவர்கள் நமக்கு சொல்லித் தந்துள்ளார்கள்.

நின்று கொன்டிருக்கும் போது கோபம் வந்தால் உட்கார்ந்து கொள்ளட்டும், உட்கார்ந்த பின்பும் கோபம் தணிய வில்லை என்றால்,சிறிது நேரம் படுத்துக் கொள்ளட்டும் என நபி(ஸல்) அவர்கள் கூறியதாக ஆபூதர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஆதாரம் : அஹ்மத், திர்மிதி

